பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 09 2025 7.15

திங்கட்கிழமை இரவு

ஆகாஷவாணி *செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், விற்பனை திருவிழாக்களை நடத்துமாறு பிரதமர் திரு நரேந்திர மோடி தேசிய ஜனநாயக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

2) சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் விவசாயிகளுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

3) பீகாரில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளுக்கு 12 ஆவது ஆவணமாக ஆதாரையும் சேர்த்துக் கொள்ளுமாறு உச்சநீதிமன்றம் தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

4) நேபாளத்தில் சமூக ஊடக தடைக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தின் போது நேரிட்ட வன்முறைச் சம்பவங்களில் 19 பேர் உயிரிழந்தனர்.

5) உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டி சீனாவின் Ningbo-வில் இன்று தொடங்குகிறது.

-- இனி விரிவான செய்திகள்--

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், விற்பனை திருவிழாக்களை நடத்துமாறு பிரதமர் திரு நரேந்திர மோடி தேசிய ஜனநாயக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேசிய ஜனநாயக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகளின் பலன்கள் குறித்து வர்த்தகர்களிடம் எடுத்துரைக்குமாறு பிரதமர் இக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

>><><><<

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் விவசாயிகளுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில் டிராக்டர் தொடங்கி உரங்கள் வரை அனைத்தும் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் கிடைக்கும் என்றார்.

இதற்கடையே இந்த வரி சீர்திருத்த நடவடிக்கைகள் ஜவுளித் துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று திருப்பூர் பனியன் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு ஈஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – ஈஸ்வரன் – 48 செகண்ட்ஸ்)

>><><><<

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக வேலைவாய்ப்பு இன்மை சதவீதம் வெகுவாக குறைந்துள்ளதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஜி20 அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளில் இந்தியாவில் மட்டும்தான் வேலைவாய்ப்பு இன்மை 2 சதவீதம் அளவுக்கு குறைவாக உள்ளது என்று கூறினார்.

உலக பொருளாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இது இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக மத்திய அரசு நிறைவேற்றியுள்ள திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

>><><><<

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண் துறை முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமரின் முதன்மை அறிவியல் ஆலோசகர் திரு Ajay Kumar Sood கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பொருளாதார வளர்ச்சியில் 15 முதல் 20 சதவீத பங்கினை வேளாண் துறை கொண்டிருப்பதாக கூறினார்.

வேளாண் துறை 60 சதவீத வேலைவாய்ப்புகளை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

பயிர் இழப்பை தடுப்பதற்கு ஏதுவாக தேசிய இயக்கம் ஒன்று விரைவில் தொடங்கப்படவுள்ளதாகவும் திரு Ajay Kumar Sood கூறினார்.

>><><><<

பீகாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளுக்கு 12 ஆவது ஆவணமாக ஆதாரையும் சேர்த்துக் கொள்ளுமாறு உச்சநீதிமன்றம் தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக மனுக்களை விசாரணை செய்த நீதிபதிகள் திரு Surya Kant, திரு Joymalya Bagshi ஆகியோரைக் கொண்ட அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இருப்பினும் குடியுரிமைக்கான ஆவணமாக ஆதாரை பயன்படுத்த இயலாது என்றும் அந்த உத்தரவில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் சமர்ப்பிக்கும் ஆதார் அட்டையின் நம்பகத்தன்மையை தேர்தல் ஆணையம் சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><<

முப்படைத் தளபதிகளின் மாநாடு கொல்கத்தாவில் வரும் 15 ஆம் தேதி தொடங்கி 17 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

சீர்திருத்த ஆண்டு என்ற மையக் கருத்தோடு இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக ராணுவத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த மாநாட்டினை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைக்கவுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் உட்பட பலர் பங்கேற்பார்கள் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

இந்தியா-கத்தார் இடையேயான வர்த்தக ஒப்பந்தத்திற்கான நெறிமுறைகள் அடுத்த மாதத்தில் இறுதி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதிகாரிகள் நிலையிலான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த நெறிமுறைகள் உறுதி செய்யப்பட்டவுடன் மத்திய அமைச்சர் திரு பியூஷ்கோயல் கத்தார் பயணம் மேற்கொண்டு ஒப்பந்தம் இறுதி செய்வார் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><<

பீகாரில் அங்கன்வாடி பணியாளர்களுக்கான மதிப்பூதியம் உயர்த்தப்படுவதாக அம்மாநில முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ள அவர், அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் ஆண்களுக்கான மதிப்பூதியம் 7 ஆயிரத்திலிருந்து 9 ஆயிரம் ரூபாயாகவும், பெண்களுக்கான மதிப்பூதியம் 4 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரத்து 500 ரூபாயாகவும் உயர்த்தப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கர்ப்பிணி பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்தை உறுதி செய்வதில் அங்கன்வாடி பணியாளர்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு அவர்களுக்கான மதிப்பூதியம் உயர்த்தப்படுவதாகவும் திரு நிதிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

>><><><><<

பஞ்சாபில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகையை அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

இதன்படி, ஏக்கர் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என்று பஞ்சாப் அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

மழை வெள்ளத்தால் முழுமையாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு மட்டுமே இது பொருந்தும் என்றும் அதில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

>><><><><<

ஜம்மு கஷ்மீரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

குல்காம் மாவட்டத்திற்கு உட்பட்ட வனப் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து பாதுகாப்புப் படையினர் அப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதில் பாதுகாப்புப் படையை சேர்ந்த ஒருவர் காயமடைந்ததாகவும் அவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

>><><><><<

நேபாளத்தில் சமூக ஊடகங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தின் போது நேரிட்ட வன்முறைச் சம்பவங்களில் 19 பேர் உயிரிழந்தனர். 347 பேர் காயமடைந்தனர்.

காட்மண்டுவில் நடைபெற்ற இந்த போராட்டத்தின்போது நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அமைதியாக நடைபெற்று கொண்டிருந்த இந்த போராட்டத்தில் பங்கேற்றவர்கள், நாடாளுமன்ற வளாகத்திற்குள் நுழைய முயன்றபோது காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர்.

இதன்காரணமாக ஏற்பட்ட மோதலில் உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

இதற்கிடையே, நேபாள அமைச்சரவையின் அவசரக்கூட்டம் இன்று நடைபெற்றது.

அந்நாட்டு பிரதமர் திரு கே பி ஷர்மா ஒலி தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் போராட்டம் காரணமாக எழுந்துள்ள சூழ்நிலை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

>><><><><<

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டி சீனாவின் Ningbo -வில் இன்று தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் Niraj Kumar, Amit Sharma, Ramita Jindal உட்பட 24 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

------------

Macedonia -வில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

19 வயதிற்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் Abhinandh -ம் 15 வயதிற்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் ரித்விக் குப்தாவும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

19 வயதிற்குட்பட்டோருக்கான கலப்பு இரட்டையர் பிரிவில் Abhinandh – Syndrela இணையும் 15 வயதிற்குட்பட்டோருக்கான ஆடவர்இரட்டையர் பிரிவில் Sahil – Ritvik இணையும் வெண்கலப்பதக்கம் வென்றது.

------------

ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா 12-0 என்ற கோல் கணக்கில் சிங்கப்பூரை வென்று சூப்பர்-4 சுற்றுக்கு முன்னேறியது.

சீனாவின் Hangzhou -வில் நடைபெற்ற இப்போட்டியின் இன்றைய ஆட்டத்தில் Navneet Kaur மற்றும் Mumtaz Khan ஹாட்ரிக் கோல் அடித்தனர்.

--------------

உஸ்பெகிஸ்தானின் Samarkand -ல் நடைபெற்று வரும் Grand Swiss செஸ் போட்டியின் மகளிர் பிரிவு நான்காவது சுற்று முடிவில் இந்தியாவின் வைஷாலி தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

--------------

உலக சீனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Yogendra Kumar Jaiswal காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

----------------

டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் யுகி பாம்ரி 22-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

--------------

ஐசிசியின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரர் விருதுக்கு இந்தியாவின் முகமது சிராஜ், நியூசிலாந்தின் Matt Henry மற்றும் வெஸ்ட் இண்டீஸின் Jayden Seales ஆகியோரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

>> <<